பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

26 ] சென்னை—ஞாயிறு, அக்டோபர் 6, 1946. [ விலை. அணா. 2

## மதுவிலக்கு மணி மொழிகள்

(கீழ்க்கண்டவை எட்வர்ட்ஸ் என்பவர் பிரசுரித்துள்ள மணி மொழி புது அகராதி என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை— வி. ஜி. டி.)

(1) எந்த லாகிரி வஸ்துவையும் உபயோகிக்கலாகாது.

(2) என்முன் விசாரணைக்கு வரும் குற்றங்களில் பெரும்பாலானவை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ மதுபானத்தால் ஏற்பட்டனவேயாகும்.

ஜட்ஜ் கோல்ட்ரிட்ஜ்

(3) குடிகாரனாயுள்ளவன் எந்தக் குற்றமும் செய்வதற்கு தகுந்தவனாவான்.

குவார்ல்ஸ்

(4) மதுபானம் சூது விளையாட்டத்தில் கொண்டு போயச் சேர்க்கிறது.

காட்டன்

(5) யமதர்மன் தனக்கு முதல் மந்திரி நியமிக்க விரும்பினான். யுத்தம், நோய், பிணி போன்ற பலர் மனுச் செய்தார்கள். அப்பொழுது மதுபானம் வந்து விலகுங்கள், நானல்லவோ உங்கள் தந்தை என்று சொல்லி அவர்களை விலக்கிக்கொண்டு யமதர்மனிடம் சென்றது. யமதர்மன் உடனே அதையே தமது பிரதம மந்திரியாக நியமித்துக் கொண்டான்.

டாட்ஸ்லி

(6) தூக்குப் போட்டுக் கொள்கிறவர்களும், விஷம் சாப்பிடுகிறவர்களும் தண்ணீரில் அமிழ்ந்து போகிறவர்களும் எப்படித் தங்களைத் தாங்களே கொன்று கொள்கிறார்களோ அப்படியே குடி வெறியர்களும் தங்களைத் தாங்களே கொன்று கொள்கிறார்கள்.

ஷெர்லாக்

(7) மதுவிலக்கையே நான் சகல சமூக அரசியல் சீர்திருத்தத்திற்கும் அஸ்திவாரமாகக் கருதுகிறேன்.

காட்டன்

கீழ்கண்டவை சாணக்கியருடைய மொழிகள் :—

1) மதுபானத்தை ஒரு தட்டிலும் மற்ற பாவங்களையெல்லாம் ஒரு தட்டிலும் வைத்தால் சரிசமானமாக இருக்கும்.

(2) குடி வெறியை விட கொடியதான பாவம் எதுவும் இதற்கு முன்னும் இருந்ததில்லை, இனிமேலும் இருக்கப் போவதில்லை.

## ஹரிஜனங்களின் உரிமைகள்

ஹரிஜன நண்பர்கள் எனக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். சிலர் என்னிடம் நேரில் வந்தார்கள். இப்பொழுது அதிகாரம் ஜனங்களுடைய கையில் வந்திருப்பதால் ஒன்றுக்கதிகமான ஹரிஜன மந்திரிகள் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். அவர்களுடைய ஜனத்தொகையை வைத்துப் பார்த்தால் மூன்றுபேர்களாவது இருக்கவேண்டும். இந்த கணக்குப்படியே ஒவ்வொரு இலாக்காவிலும் உத்தியோகங்கள் தரவேண்டுமென்றும் கேட்கிறார்கள். தகுதியுள்ளவர்கள் இல்லை என்று சொல்வது தவறு என்று கூறுகிறார்கள். ஹரிஜனர் அல்லாதவர்களில் தகுதியில்லாதவர்களையும் நியமித்திருப்பதாக உதாரணங்கள் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுவதெல்லாம் சரி என்று ஒப்புக் கொள்ள நான் தயாராக இல்லை. என்னுடைய கொள்கைகள் வேறுவிதமானதாகும். கடைமையைச் செய்யும் விஷயத்தில் மட்டுமே மனிதனுக்கு அதிகாரமுண்டு. கடமையைச் சரியாக நிறைவேற்றும் பொழுதுதான் உரிமைகள் கிடைக்கும் என்பது என் நம்பிக்கை. அப்படிக் கிடைக்கும் உரிமைகள் தான் பொருத்தமானதாகவும் இருக்கும். திறமையுள்ள ஹரிஜனரல்லாதவர் ஒவ்வொருவரும். தங்கள் உரிமையைப்பெற விரும்பினால் சமூகம் நிலைகுலைந்து போகும். கடமையைச் செய்ய எல்லோருக்கும் உரிமையுண்டு. எத்தனையோ விதங்களில் சேவை செய்யலாம். வெகு சிலரே எஜமானராய் இருக்க முடியும். எஜமானராய் இருக்க விரும்புகிறவர்கள் எஜமானர் ஆக மாட்டார்கள். ஆனால் நான் சொல்லுகிறபடி ஜனங்கள் செய்வதில்லை என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் எங்குபார்த்தாலும் பதவி வேட்டை அதிகமாக இருக்கிறது. அதில் பலர் ஏமாந்து போகிறார்கள். நான் சென்ற ஐம்பது வருஷ காலமாக என் கொள்கைப்படி நடக்க முயன்று வருகிறேன். பதவிமோகம் அழகு செய்வதில்லை. அதில் எனக்கு அக்கரையில்லை. ஹரிஜனங்களுக்கு நான் சொல்லக்கூடிய புத்திமதியாதெனில், அவர்கள் தங்கள் கடமைகளைப்பற்றிமட்டுமே சிந்திக்கவேண்டுமென்பதும், கடைமைகளைச் செய்தால் இரவுக்குப் பின் பகல் நிச்சயமாய் வருவது போல உரிமைகள் தாமாக வந்து சேரும் என்பதுமே யாகும்.

புது டில்லி, — 27-9.46 — மோ. க. காந்தி

## பீஹாரே! நீயுமா?

சத்தியாக்கிரக காலத்தில் வெகு சிறப்பாக நடந்து கொண்ட பீஹார் இப்பொழுது துராக்கிரகமாக நடந்து தன்னை கேவலப்படுத்திக்கொள்வது விதியின் கொடுமையாகவே தோன்றுகிறது.

காரணமின்றி சங்கிலிகளை இழுத்து ரயில்வண்டிகளை நிற்கும்படி செய்து குறிப்பிட்ட நேரத்தில் வண்டி போய் சேரமுடியாமல் செய்வது அங்கே சர்வசாதாரணமாக ஆய்விட்டதுபோல் தோன்றுகிறது. பிரயாணிகள் டிக்கட் வாங்குவதில்லையாம், தேசீய சர்க்கார் ஏற்பாட்டு விட்டதால் டிக்கட் வாங்கவேண்டியதில்லை என்று கூறுகிறார்களாம். ஜே ஹிந்த் என்று கோஷித்துக்கொண்டே கொலையும், கொள்ளையும் செய்கிறார்களாம்.

இந்தக் குற்றச்சாட்டுகள் மிகப் பெரியவை. இவைகள் எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. இது சரி, இது தவறு என்று தெரிந்து கொள்ளாமல் நடக்கும் ஜனங்களுள்ள சில பாகங்களை அறிவேன். பீஹாரில் மட்டுமின்றி இந்தியா முழுவதுமே காணப்படும் சட்ட விரோதமான காரியங்களுக்கு நான்தான் பெரும்பாலும் காரணஸ்தனென்று கூறப்படுவதையும் அறிவேன். ஆனால் அது முன்பின் யோசியாமல் கூறப்படும் குற்றச்சாட்டே என்று நான் கூறுவது மிகையாகும். நான் சட்டத்தை மறுக்கும்படி சொன்னால் அது உடம்புக்கு அவசியமான நல்ல உணவை உண்ணும்படி சொல்வது போன்றதாகும்.

நான் சட்டத்தை மீறச் சொல்வது சமூகத்தை புனர் நிர்மாணம் செய்வதற்கேயாகும். அதில் கட்டுப்பாடும் ஒழுங்கும் உண்டு. அநியாயமான சட்டத்தையும் தீங்கு செய்யும் சட்டத்தையும் எதிர்ப்பதற்காகவே நான் சட்டத்தை மீறும்படி சொல்கிறேன். சொந்த நன்மைகளை உத்தேசித்து கடமையைச் செய்யாமலிருப்பது என்னுடைய சட்டமறுப்பாகாது. அபாயம் ஏற்பட்ட காலத்தில் மட்டுமே சங்கிலியைப் பிடித்து இழுத்து வண்டியை நிறுத்தலாம். டிக்கட் வாங்காமல் ஒருபொழுதும் பிரயாணம் செய்யக் கூடாது. கொள்ளையும், கொலையும், தீக்கொளுத்துவதும், என்னுடைய சட்டமறுப்பில் சேர்ந்ததேயல்ல. என்னுடைய சட்டமறுப்பை சிலர் தானே செய்யலாம், எல்லோரும் செய்ய முடியுமா? என்று கேட்கிறார்கள். ஜனங்கள் கெட்ட உணவையோ விஷமான உணவையோ சாப்பிட்டு விடுவார்கள் என்று பயந்து அவர்களுக்கு நான் நல்ல உணவு கொடாமல் அவர்களைப் பட்டினி போடலாமா?

சாதாரணமாக நான் என்னைக் குறித்துப் பேசும் வழக்கமில்லை. அத்துடன் இப்பொழுது நான் கூறுவது தற்காப்புக்காகக் கூறவுமில்லை. பீஹாரில் நடப்பதாகக் கூறுவதெல்லாம் விஷத்தை உண்பதாக இருக்கின்றது என்பதை மனத்தில் ஆழமாகப் பதிய வைப்பதற்காகவே கூறுகின்றேன். பீஹாரில் உள்ளவர்கள் செய்யுங் காரியங்கள் சுதந்திரத்தையோ சுயராஜ்யத்தையோ உண்டுபண்ணா. அவை தற்கொலை செய்து கொள்வதற்கு சமானமாகும். பிரிஜ்கிஷோர் பிரசாத்தையும் ராஜேந்திர பிரசாத்தையும் பெற்றெடுத்த பீஹார் மாகாணம் இந்த நிலைமைக்கு வந்துவிட்டதா? பொறுமையாக வேலை செய்து நிர்மாணித்த நல்ல வேலையை அறிவில்லாமல் அழித்து விடுவதை பீஹார் ஊழியர்கள் தடுக்க வேண்டும். பீஹாரே! ஜாக்கிரதை!

புது டில்லி, – 29-9-46 – மோ. க. காந்தி.

## கருணை நிறைந்த செயல்

சில அக்கிரமிகள் பத்து வயது சிறுவன் ஒருவனைக் கொல்ல வந்தார்கள். அதைக் கண்டதும் அருகில் சென்ற பட்டாணியர் ஒருவர் அவனைக் காப்பாற்றுவதற்காக முயன்றார். அவர் இந்திய தேசீய ராணுவத்தைச் சேர்ந்தவர். ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அக்கிரமிகளிடம் அவர் எவ்வளவோ வேண்டிக் கொண்டும் பயனில்லாமல் போய் விட்டது. அக்கிரமிகள் பையனையும் பட்டாணியையும் குத்தி விட்டார்கள். பையன் இறந்து போனான். பட்டாணி பிழைத்துக் கொண்டார். இறந்து போன பையனின் தந்தை அவருக்கு 4000 ரூபாய் பரிசாக வழங்க விரும்பினார். ஆனால் பட்டாணி என் கடமையைச் செய்தேன், பரிசு ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று மறுத்து விட்டார். இந்த மாதிரிக் காரியங்கள் ஏராளமாக நடைபெற வேண்டுமென்று விரும்புகின்றேன்

புது டில்லி — 28-9-46 — மோ. க. காந்தி.

## குருவாயூர்

குருவாயூரில் நடந்த சத்தியாக்கிரகப்போராட்டத்தை அறியாதவர்கள் யார்? அங்குள்ள கோவிலை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்று உண்ணாவிரதமிருக்கப் போவதாக திரு. கேலப்பன் பயமுறுத்தினார். நான் அதற்காகப் போராடுவதாக உறுதிகூறி உண்ணாவிரதமிருப்பதைப் பலயாக ஆட்சேபித்ததின் பேரில் அவர் அதை நிறுத்திக் கொண்டார். அதன் பின் கோவிலைத் திறந்து விடலாமாவென்று ஜாதி ஹிந்துக்களிடம் ஓட்டு எடுக்கப் பெற்றது. திறந்துவிடச் சாதகமாக அபரிமிதமான ஓட்டுக்கள் கிடைத்தன. ஆனால் கோவில்நிர்வாகியான ஜாமரீன் தம்மால் ஒன்றும் செய்ய முடியாதென்று கூறினார். அதன் பின் நான் குருவாயூருக்குச் சென்றேன். ஆலயத்தைத் திறந்துவிட வேண்டுமென்று ஜனங்கள் எல்லோரும் கூறினார்கள். ஜாமரீனைச் சந்தித்துப் பேசினேன். அவர் மரியாதையாக தம்முடைய நிலைமையைச் சொன்னார். கேரள தேசத்திலுள்ள மற்ற கோயில்கள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. திருவிதாங்கூர் தன்னுடைய பெரிய சமஸ்தான பிரகடனத்தின் மூலம் சிறந்த வழிகாட்டியா யிருக்கின்றது. மீனாக்ஷியம்மன் கோயிலும் பழனி கோயிலும் திறந்தாய் விட்டன. என் குருவாயூர் கோயில் மட்டும் திறந்து விடப்படாமல் இருக்க வேண்டும்? மறுபடியும் சத்தியாக்கிரம் செய்ய வேண்டிய அவசியம் வாராதென்று எண்ணுகிறேன். கோவிலுக்குப் போகும் ஜனங்களில் பெரும்பாலோர் ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கிறார்கள். சட்டந்தான் தடையா யிருக்கிறது. அந்தத் தடையை நீக்குவது மாகாண சர்க்காருடைய கடமையும் தேசீய சர்க்காருடைய கடமையுமாகும். இன்னும இந்தியாவில் தீண்டாதவர்கள் என்று தவறாகச் சொல்லப்படும் ஹிந்துக்களுக்குக் கோவில்களைத் திறந்து விடாமல் இருப்பது மிகுந்த வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது.

புது டில்லி, — 29.9-46 — மோ. க. காந்தி

## கேரளநாட்டில் கூட்டுறவு இயக்கம்

கேரளநாட்டில் கூட்டுறவு இயக்கத்தை ஜனங்கள் அதிகமாக விரும்புகிறார்கள் என்றும் அது நன்றாக வளர்ந்து வருகிறதென்றும் இரண்டு நாட்களுக்கு முன் என்னைப்பார்க்க வந்திருந்த திரு. கேலப்பன் சொன்னார். கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக நடக்குமானால் திரு. கேலப்பன் சொன்ன செய்தி மிகுந்த சந்தோஷத்தைத் தருவதாகும். ஆனால் எனக்குச் சந்தேகமாயிருப்பதாக நான் அவரிடம் சொன்னேன். கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்துள்ள அக்கத்தினர்கள் யோக்கியமானவர்களாயிருக்கவேண்டும். கூட்டுறவின் நன்மையை உணர்ந்திருக்கவேண்டும். நாளுக்குநாள் உயர்ந்துவரும் லக்ஷயமும் இருக்கவேண்டும். அப்பொழுது தான் கூட்டுறவு முயற்சிகள் வெற்றிகரமாக நடக்கும்.

கடும் வட்டி வாங்கி லாபம் சம்பாதிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தினால் அது தவறான லட்சியமாகும். கூட்டுறவு முறையில் பயிர் செய்வதும் பால்பண்ணை ஏற்படுத்துவதும் சந்தேதமற நல்ல லட்சியமாகும். அதனால் தேசத்திற்கு க்ஷேமமுண்டாகும். இவைகளைப் போல் இன்னும் பலகாரியங்களைக் கூறலாம். கேரளநாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எவ்விதமாக நடைபெறுகின்றனவோ அறியேன். வேலை தெரிந்த யோக்கியமான மேல் அதிகாரிகள் உண்டோ இல்லையோ? லட்சியம் தவறாக இருந்தாலும், அதிகாரிகள் யோக்கியர்களாய் இல்லாவிட்டாலும் இத்தகைய இயக்கங்கள் பாழாய்ப் போகின்றன.

புது டில்லி — 29-9-46 — மோ. க. காந்தி

## தோட்டிகளின் நிலைமை

கேள்வி:—தாங்கள் இந்த விஷயத்தைப் பற்றி இதற்கு முன்னால் எழுதி இருக்கிறீர்கள் என்பது உண்மைதான். ஆனால் தோட்டிகள் கக்கூஸ் எடுப்பதற்கு தகுந்த சாதனங்களை முனிஸ்பாலிட்டியாரும் சொந்தத்தில் தோட்டிகளை நியமித்துக் கொள்ளுகிறவர்களும் கொடுக்க வேண்டிய கடமையைப் பற்றி மறுபடியும் தாங்கள் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தண்ணீர் ஒழுகாத இரும்பு வாளிகள் கொடுக்கப் படாவிட்டால் தோட்டிகளின் மீது ஜலம் ஒழுகி கஷ்டப்படுத்துகிறது. உடம்பில் எந்த உறுப்பையும் அசங்கியப்படுத்திக் கொள்ளாமலே தோட்டிவேலை செய்யப்படலாமல்லவா? அப்படிச் செய்தால்தான் அந்த வேலைக்கு இப்பொழுது இல்லாத கௌரவம் ஒன்று ஏற்பட ஏதுவாகும். கக்கூஸ் எடுப்பதற்கும், தெருப் பெருக்குவதற்கும் தகுந்த சாதனங்களைக் கொடுப்பதோடு தோட்டிகளுக்கு தக்க கல்வியும் கொடுக்க வேண்டும். சுத்தத்தை ஏற்படுத்துவதற்காக மாகாண சர்க்காரும் முனிஸ்பாலிட்டியாரும் கவனிக்க வேண்டிய விஷயம் இது.

பதில்:—உடம்பில் அழுக்குப்படாமல் தோட்டிவேலை செய்வதற்குத் தக்க சாதனங்களையும் தகுந்த உடையையும் தோட்டிகளை நியமிப்போர் கட்டாயமாகக் கொடுத்துத் தீரவேண்டுமென்று சர்க்கார் விதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். தோட்டிகளைக் கவனித்துக் கொள்வதற்காக நியமிக்கப்படும் இன்ஸ்பெக்டர்களும், ஓவர்சியர்களும் எப்படியாவது வேலையைக் கறந்து விடுவது என்ற எண்ணத்தை விட்டு விட்டு அன்போடு அவர்களை நடத்தி சுத்தமாக வேலை செய்யும்படி செய்ய வேண்டும். இந்தமாதிரி நடப்பதற்கான பயிற்சியை அந்த உத்யோகஸ்தர்களுக்கு அளிக்க வேண்டும். இப்பொழுதுள்ள முறையினால் கிடைக்கும லாபம் யாதெனில் உயர்ந்த பட்சஅசுத்தமும் குறைந்த பட்ச வேலையும் லஞ்சமும் அவமரியாதையும் தான்.

புது டில்லி, — 29-9-46 — மோ. க. காந்தி

## எப்பொழுது ஒழியும்?

ஒரு நிருபர் எழுதுகிறார்:—

"சிம்லா மலையிலுள்ள சமஸ்தானங்கள் எவ்வளவு பிற்போக்குடையனவாக இருக்கின்றன என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ராம்பூர் புஷார் என்னும் ஸமஸ்தானத்தில் அரசர் வைதீகமான கொள்கைகள் உடையவர். சமீபத்தில் உயர்ந்த ஜாதி ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபர் கோலி வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை கலியாணம் செய்து கொண்டார். இந்த விஷயத்தை அந்த கிராமத்தின் மணியகாரர் அரசரிடம் தெரிவித்தார். அரசர் மணமக்கள் ஒவ்வொருவரும் 100 ரூபாய் அபராதம் கொடுக்கவேண்டுமென்றும் ஆறுமாத காலம் சிறையிலிருக்க வேண்டுமென்றும் தண்டனை விதித்தார். இத்தகைய செயலை சகிக்க முடியவில்லை, இது முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிறது. கலப்பு மணம் செய்துகொள்ள எண்ணியிருந்த சிலர் பயந்து அவ்விதம் செய்யாதிருந்து விட்டார்கள்.

ஏதேச்சாதிகாரம் அடியோடு வீழ்த்தப்படும் வரை நாம் காத்துக்கொண்டுதான் இருக்கவேண்டுமோ?',

பதில்:—ஒருவர் பலரை அடக்கி ஆள்வது சகிக்க முடியாத காரியம். அது ஒழிந்து தீரவேண்டும். அதை எப்படி ஒழிப்பதென்பதுதான் கேள்வி. அடக்கி ஆளப்படுவோர் உண்மையாகவே "வாழ்வது" என்று ஆரம்பித்துவிட்டால் எந்த ஏதேச்சாதிகார ஆட்சியையும் ஒழித்துவிடலாம். ஆட்சி புரியும் ஒருவருடைய தலையை வெட்டிவிடுவது எளிதான காரியம். ராவணனுடைய கதையை நினைத்துப் பாருங்கள். அவனுக்கு 10 தலைகள் இருந்தன. ஆனால் எந்தத் தலையை வெட்டினாலும் அதே நிமிஷத்தில் அது இருந்த இடத்தில் புதுத்தலை ஒன்று வந்து இருந்துவிடும். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது யாதெனில் ஜனங்கள் மட்டும் உயிர்த்து எழுந்துவிட்டால் தலைகளை வெட்ட வேண்டிய அவசியம் கிடையாது என்பதே ஆகும். ஆட்சி புரிபவர் அடிபணிந்து விடுவார். கல்யாணம் செய்து கொண்ட தம்பதிகள் சந்தோஷமாக தண்டனையை அனுபவிப்பார்களென்று நம்புகிறேன். கலப்பு மணம் செய்வது காம இச்சையினால் ஏற்படாமல் சீர்திருத்த விருப்பத்தினாலேயே ஏற்படுமானால் அந்தத் தம்பதிகளைப் போலவே மற்றவர்களும் நடந்து கொள்ளவேண்டும். சீர்திருத்தவாதிகள் தண்டனை அனுபவிக்க விரும்பாவிட்டால் தங்கள் இஷ்டம் போல் நடக்கக்கூடிய இடத்துக்குக் குடிபோய்விட வேண்டும்.

புது டில்லி, — 30-9-46 — மோ. க. காந்தி.

## சர்க்கரை மரங்கள்

பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் காங்கிரஸ் மகாசபை மதுவிலக்கு இயக்கம் நடத்தியபொழுது கள்ளிறக்கும் மரங்களை வெட்டிவிட வேண்டுமென்று சொல்லிற்று. அந்த மரங்கள் போதை தராத, இனிமையான, ஆரோக்கியம் தரக்கூடிய பதநீரைத் தருவதால் அவற்றை வெட்டக் கூடாது என்பதை அந்தக் காலத்தில் உணர்ந்து கொள்ளவில்லை. அந்த மரங்களிலிருந்து கள்ளிறக்கப் படுவதற்கு அவைகளின் மீது குற்றம் சொல்லக்கூடாது. பதநீரைக் கள்ளாக்கும் மனிதனையே குற்றம் சொல்ல வேண்டும். ஆதலால் சரியான பரிகாரம் யாதெனில் மரங்களை வெட்டாமல் அவற்றின் சொந்தக்காரனைத் திருத்துவதுதான். அந்த மரங்கள் இரண்டுவிதமாக நமக்குப் பயன் தருகின்றன. அவைகளிலிருந்து நமக்கு வெல்லம் கிடைக்கிறது. ஈச்ச மரமும் பனை மரமும் நல்ல பழங்களையும் தருகின்றன.

அந்த மரங்களின் ஓலைகள் முதலியவற்றைக் கொண்டு கூடைகள், விசிறிகள், துடைப்பங்கள் முதலிய பல உபயோகமான சாமான்கள் செய்யலாம். ஒவ்வொரு பனைமரத்திலும் வருஷந்தோறும் ஒரு மணங்கு வெல்லம் கிடைக்கும். ஈச்ச மரத்தில் அரைக்கால் மணங்கு கிடைக்கும். கரும்புக்குத் தண்ணீரும் உரமும் வேண்டும். மிருகங்கள் அதை அழித்து விடவும் கூடும். இவைகளெல்லாம் சர்க்கரை மரங்களுக்குத் தேவையில்லை. இந்த மரங்களை நட்டு வைத்துவிட்டால் 50 வருஷகாலம் வெல்லம் கொடுத்துக் கொண்டிருக்கும். கரும்பைப் பயிரிடுவதற்கு வேண்டியதைப் போல இவைகளைப் பயிரிட செழிப்பான நிலங்கள் தேவையில்லை. மற்றப் பயிர்கள் செய்ய முடியாத பாழ் நிலங்களில் இவைகளைப் பயிராக்கலாம். ஈச்சமரம் பத்து வருஷத்துக்குப் பிறகும் பனைமரம் 15 வருஷத்திற்குப் பிறகும் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்.

போதுமான அளவு மர வெல்லம் கிடைப்பதற்காக அதிகமான மரங்களை உற்பத்தி செய்ய வேண்டும். இந்த மரங்களை பத்தடிக்கு ஒன்றாக நடவேண்டும். நெருக்கமாக நட்டு வைத்தால் நல்ல பலன் தராது. மரங்களுக்கு இடையில் தானியங்களைப் பயிர் செய்யலாம். இதனால் மரத்துக்கும் கெடுதல் இல்லை. தானியப் பயிருக்கும் கெடுதல் இல்லை.

மகன்வாடி
வார்தா

கஜனன் நாய்க்
வெல்ல இலாகாத் தலைவர்

தமிழ் ஹரிஜன்

அக்டோபர் 6 ஞாயிறு 1946

## கையால் நூற்பதும் மில்லில் நூற்பதும்

ஒவ்வொரு மாகாணத்துக்கும் குறிப்பிட்ட தொகைக் கதிர்கள்தான் கொடுக்கப்படு மென்றும் அவைகளை வாங்கிக்கொள்ளா விட்டால் பிற மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டு விடுமென்றும் சர்க்கார் கூறியதாக மகாணங்களில் மந்திரி சபை ஏற்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் நான் கேள்விப்பட்டேன். இப்பொழுது மகாணங்களில் மந்திரி சபைகள் நடந்து வருவதால் அவர்கள் புதிதாக மில்கள் ஏற்படுத்த அனுமதி கொடுத்தால் அவர்கள் கதரை அபிவிருத்தி செய்ய எண்ணி இருப்பது பலன் பெறுமா என்ற கேள்வி எழுகின்றது. கையால் நூற்பதை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்று அவர்கள் உண்மையாகவே விரும்பினல் அவர்கள் மில்கள் ஏற்படுத்த சம்மதிக்க முடியாது. இந்திய மக்களுக்கு வேண்டிய துணியை மில்கள் தான் நெய்து தரமுடியும் என்றும் அதனல் அவைகளே தான் நெய்து தரவேண்டு மென்றும் கதரில் பக்தி உடைய ஒரு சிலர்க்காக மட்டுமே கையால் நூற்பதை நடத்திவரலாம் என்றும் ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனல் காங்கிரஸின் கொள்கை அதுவன்று. அகில இந்திய சர்க்கா சங்கத்தின் கொள்கையும் அதுவன்று. தேசிய சர்க்கார்கள் கையால் நூற்பது பயன் படாதென்று முடிவு செய்வதாயிருந்தால் அவர்கள் அகில இந்திய சர்க்கா சங்கத்தார் வகுக்கும் திட்டத்துக்காக ஒரு ரூபாய் கூடச் செலவு செய்யக்கூடாது. அப்படிக்கின்றி அவர்களுக்கு கதர் திட்டத்தில் நம்பிக்கை இருக்குமானல் மில் கதிர்கள் வேண்டா மென்று சொல்லி விட வேண்டும். அதனல் ஆரம்பத்தில் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தலாகாது. இப்பொழுது நஷ்டம் போல் தோன்றுவது பின்னல் லாபமாகவே இருக்கும்.

காங்கிரஸ் மாகாணங்களெல்லாம் ஒன்று போல் அனுஷ்டிக்கத் தகுந்த ஒருதிட்டத்தை ஏன் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் வகுக்கவில்லை என்று ஒரு கேள்வி கேட்கப்படுகிறது. கமிட்டியார் அப்படிச் செய்தால் யாரும் தடுக்கமாட்டார்கள். ஆனல் காங்கிரஸ் கொள்கை இதுதானென்று எத்தனையோ தடவை சொல்லியாய் விட்டதென்று அவர்கள் சொல்லக்கூடும். ஒவ்வொரு மாகாணமும் அந்தக் கொள்கையி னிடத்தில் தனக்குள்ள நம்பிக்கையை அளந்து பார்த்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கொள்கையை மட்டுமே வகுப்பார்கள், விபரங்களை எல்லாம் கூறமாட்டார்கள். அப்படியானல் மத்திய சர்க்கார் ஒரு கொள்கையை வகுத்தா லென்ன என்று கேட்கலாம். மத்திய சர்க்கார் இந்தியா முழுவதிலுமுள்ள எல்லாக் கட்சிகளுக்கும் பிரதிநிதியாகும். அதனல் அது முற்றிலும் காங்கிரஸிற்கு சம்பந்தமான ஒரு கொள்கையை வகுத்து எல்லா மாகாணங்களையும் அனுஷ்டிக்கும்படி சொல்ல முடியாது. அதுவுந் தவிர துணி சம்பந்தமான விஷயம் மாகாண சர்க்காரின் அதிகார எல்லைக்குட் பட்டதாகும். மாகாணங்களின் உரிமைகளில் அனவசியமாக மத்திய சர்க்கார் தலையிடலாகாது.

ஆகவே எந்த முறையில் பார்த்தாலும் மாகாண சர்க்கார்களின் அதிகாரத்திற்கு விடப்பட்டிருக்கும் கதர், மதுவிலக்கு போன்ற விஷயங்கள் சம்பந்தமாக மாகாண சர்க்கார்கள் தங்களுக்குகந்த முறையில் திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும். இந்த விஷயங்களில் அவர்கள் தங்களுக்கு வழி காட்டும்படி காங்கிரஸ் காரியக் கமிட்டியாரை எதிர்பார்ப்பார்களானல் அவர்கள் படு தோல்வி அடைவார்கள். மத்திய சர்க்கார் வழி காட்ட ஆசைப்பட்டால் அது தவருன ஆசையாகும். அத்துடன் அவர்கள் ஆசைப்பட்டாலும் அவர்களுக்கு உரிமை கிடையாது.

புது டில்லி — 30-9.46 — மோ. க. காந்தி.

## இரண்டு குதிரைகளின் மேல் சவாரி செய்தல்

உத்கல் மாகாணத்தில் தந்தி என்று ஒரு ஜாதி இருக்கிறது. சட்டத்தில் அந்த ஜாதியினர் ஹரிஜனங்களாகவே கருதப்படுகின்றனர். அவர்களில் பலர் பிழைப்பிற்கு வழிதேடும் பொருட்டு சிங்பூம் ஜில்லாவிலுள்ள கொல்ஹான் என்னும் இடத்திற்குப் போயிருக்கிருர்கள். அவர்கள் தங்களை ஹரிஜனங்களாகக் கருதுவதில்லை. அதனல் அவர்கள் பீகாரிலுள்ள ஹரிஜனங்களோடு சேர்க்கப்படவில்லை. அவர்கள் தங்களை ஹரிஜனங்களென்று சொல்லி சர்க்கார் ரிகார்டுகளில் பதிவு செய்து கொள்ளவில்லை. அப்படி பதிவு செய்து கொள்ளாதது சரியானதே. ஹரிஜனங்களென்று ஏன் சொல்லிக் கொள்ள ஆசைப்பட வேண்டும். ஹரிஜனங்களென்று சொல்லிக்கொண்டால் ஹரிஜனங்களோடு ஓட்டுச் செய்யலாம். சர்க்காரிட மிருந்தும், ஹரிஜன சேவா சங்கத்தினிடமிருந்தும் கல்வி முதலிய விஷயங்களில் சிறிது உதவி பெறலாம். இதைத் தவிர வேறு என்ன நன்மை கிடைக்கும்? இவ்விதமான சுயநல நன்மைகளை உத்தேசித்து தீண்டாதவர்கள் என்று சொல்லிக்கொள்வது சரியானதா? அதை எண்ணும் பொழுதே அருவருப்பாய் இருக்கிறதல்லவா? பட்டினியாயிருந்தாலும் கூட இழிவான காரியம் செய்யக்கூடாதல்லவா?

தந்தி ஜாதியார் எவரும் ஹரிஜனங்களாய் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது ஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. கல்வி முதலிய விஷயங்களில் ஹரிஜனங்களுக்கு உதவி செய்வது போலவே சகல தாழ்த்தப்பட்ட ஜாதியார்களுக்கும் உதவி செய்ய வேண்டியது அவர்களுடைய கடமையாகும்.

தாழ்த்தப்பட்ட ஜாதியார்களை ஒரு தனி வகுப்பாக சிருஷ்டித்தது பிரிட்டிஷ் அரசாங்கமேயாகும். ஜனங்களுக்கு பொறுப்பு வாய்ந்த சர்க்கார்கள் பணக்காரர்கள் என்றும் ஏழைகள் என்றும், படித்தவர்கள் என்றும் படிக்காதவர்கள் என்றும், உயர்ந்தவர்கள் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் வித்தியாசம் பாராட்டமுடியாது. மதவித்தியாசமும் பாராட்ட முடியாது. எல்லோரும் இந்தியர்கள் என்ற ஒரே வகுப்பைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

தந்தி ஜாதியார் தங்களை ஹரிஜன வகுப்பில் சேர்த்துக்கொள்ளும்படி செய்ய முயற்சி செய்யலாகாது. சர்க்கார் உத்தியோகத்துக்காக அலையவும் கூடாது. கோடானு கோடி ஹரிஜனங்கள் முன்னேற முடியுமானல் தந்தி ஜாதியார் போன்ற ஜாதியார்களும் முன்னேற முடியும் என்பதில் சந்தேகமில்லை. கொல்ஹானிலுள்ள தந்தி ஜாதியாருக்கு நான் கூறும் புத்திமதி யாதெனில் அவர்கள் தங்களைத்திருத்திக்கொள்ள வேண்டு மென்பதும் யோக்கியமாக வேலை செய்து தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டு மென்பதும்

அவர்களில் அதிர்ஷ்ட சாலிகள் பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்பதுமேயாகும்.

புது டில்லி — 28-9-46 — மோ. க. காந்தி.

## சில கேள்விகள்

அகிலஇந்திய காங்கிரஸ்கமிட்டியின் புதியகாரியதரிசி ஸ்ரீமதி மிருதுலாபென் தாமும் ஓய்வு கொள்ளமாட்டார். பிறரையும் ஓய்வு கொள்ள விடமாட்டார். எப்பொழுதும் சுருசுருப்பாகவே இருப்பார். அவரும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை சேர்ந்த பாலகிருஷ்ண கெஸ்காரும் சமீபத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி டில்லியில் கூடிய போது மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களும் காரியதரிசிகளும் காந்தியடிகளைச் சந்திக்குமாறு ஏற்பாடு செய்தார்கள். காந்தியடிகள் கேள்விகள் கேட்குமாறு கேட்டுக் கொண்டார். அவைகளில் முக்கியமான கேள்விகளும் பதில்களும் பின் வருவனவாகும் :—

1. கேள்வி :—நம்முடைய தேர்தல்களில் சண்டை சச்சரவுகளும் லஞ்சம் முதலிய பித்தலாட்டங்களும் சர்வசாதாரணமாகி விட்டன. தேர்தல்கள் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் ?

பதில் :—நாம் ஊழியர்களாக இருக்க விரும்பாமல் தலைவர்களாக இருக்க விரும்புகிறோம் என்பதையே நீங்கள் சொல்வது காட்டுகிறது. சேவை செய்வது லட்சியமாயிருந்தால் சண்டை சச்சரவுகளுக்கு இடமிருக்க முடியாது.

ஒரு சிலர் தான் தலைவர்களாக இருக்க முடியும் என்பதை காங்கிரஸ்காரர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தேசத்தின் உண்மையான ஊழியர்களாக இருப்பதற்கு வேண்டிய யோக்கியதையைப் பெறுவதையே காங்கிரஸ்காரர்கள் தங்கள் லட்சியமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த ஸ்தாபனத்தில் அளவுக்கு மிஞ்சி தலைவர்கள் இருக்கிறார்களோ அந்த ஸ்தாபனம் கெட்டுப்போகும் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக எல்லைப்புற மாகாணத்திலுள்ள ஒவ்வொரு தொண்டரும் தலைவராக ஆசைப்பட்டு விட்டால் கபர்கானுடைய வாழ்வு நரகம் போல் ஆகி விடும். அவருடைய ஸ்தாபனமும் சின்னா பின்னமாகச் சிதறிப்போய் விடும்.

காங்கிரஸ் அமைப்பில் “ சமாதானமானதும் நியாயமானதும்” என்று கூறப்பட்டிருந்தாலும் உண்மையானதும் அஹிம்ஸையானதுமான வழிகளை அனுசரித்து சுயராஜ்யம் பெறுவதே காங்கிரஸின் கொள்கையாகும். காங்கிரஸ்காரர்கள் அந்த கொள்கைப்படி நடப்பதாயிருந்தால் சண்டை சச்சரவும் இருக்காது. லஞ்சம் முதலிய அயோக்கியத்தனங்களும் நடைபெறா. தேர்தல்களில் சச்சரவுகள் காணப்படுவதும் தவறான காரியங்கள் நடைபெறுவதும் காங்கிரஸ்காரர்கள் அந்த கொள்கைப்படி நடக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. அதனால்தான் நான் அந்த மொழிகளை காங்கிரஸ் அமைப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறேன். காங்கிரஸ் அமைப்பைத் திருத்தி அமைக்கும்வரை நான் கூறியுள்ள திட்டத்தை அனுசரித்தால் தேர்தல்கள் இல்லாமல் காரியங்களைச் செய்யலாம். உண்மையான ஊழியர்கள் மட்டுமே காங்கிரஸ்காரர்களாயிருப்பார்கள். என் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் நம்முடைய கஷ்டங்களெல்லாம் மறைந்து போகும்.

2. கேள்வி : —தேர்தல்களில் சிறுபான்மைக் கக்ஷியைச் சேர்ந்த சிலரே ஜயம் பெற்றிருக்கிறார்கள். அது சம்பந்தமாக தங்களுடைய யோசனை என்ன ?

பதில் :—சிறுபான்மையோர் குறைவான தொகையினர். அதனால் அதற்கேற்றபடிதான் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அவர்களுக்கு ஸ்தானங்கள் கிடைக்கும் அவர்கள் அதிருப்தி அடைவதாயிருந்தால் அவர்கள் என்னைப்போல் காங்கிரஸைவிட்டு விலகி நிற்கலாம். நான் காங்கிரஸைவிட்டு விலகி நின்றாலும் காங்கிரஸ்காரனாகவே இருக்கிறேன். அதுபோல் அவர்களும் காங்கிரஸ்காரர்களாயிருக்கலாம். நான் காங்கிரஸில் நான்கணா மெம்பராக இல்லை என்பதைக் கொண்டு என்னைக் காங்கிரஸ்காரன் இல்லை என்று சொல்ல முடியாது. அதே காரணத்தினால் நான் மற்றவர்களை விடக்கூட அதிகமாகக் காங்கிரஸ்காரன் என்று கூறுவேன். பெய்ஸ்பூர் காங்கிரசில் ஸ்ரீமதி அனஸூயாபென் இந்தக் கேள்வியை எழுப்பினார். நான்கணா மெம்பர்கள் கைத்தூக்குங்கள் என்று சொன்னபொழுது வெகு சிலரே கைதூக்கினார்கள். நான்கணா மெம்பர்கள் அல்லாதவர் கைதூக்குங்கள் என்று சொன்னபொழுது ஏராளமானவர்கள் கைதூக்கினார்கள். இவர்கள் எல்லோரும் சுயநலம் எதிர்பாராமல் தொண்டு செய்ய காத்துக் கொண்டிருக்கும் உண்மையான காங்கிரஸ்காரர் ஆவார்கள். இவர்களை நீக்கி விட்டால் காங்கிரஸ் என்பது ஒரு சிறு காட்சிப் பொருளாகவே இருக்கும். காங்கிரஸ்காரர் காங்கிரஸைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த எண்ணாமல் காங்கிரசுக்கு ஊழியம் செய்வதையே தங்கள் லக்ஷ்யமாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தை வைத்துக் கொண்டால் சிறுபான்மை பெரும்பான்மை என்ற வித்தியாசம் ஏற்படாது. காங்கிரசைக் கைப்பற்ற முயல்வது காங்கிரசைக் கொல்வதாகும். உண்மையான காங்கிரஸ்காரன் தன்னுடைய உயிரைக் கொடுப்பானேயன்றி பிறர் உயிரை எடுக்கமாட்டான்.

3. கேள்வி :—உணவு தானியங்களின் விதைகளை ஏற்றுமதி செய்யாமல் தடுப்பதே இடைக்கால சர்க்காரின் கொள்கையாக இருக்கிறது. அந்தக்கொள்கை உணவுதான்ய உற்பத்தியைப் பாதிக்குமல்லவா ?

பதில் :—உணவு தான்யங்களின் விலையை இன்னும் அதிகமாகக் குறைக்கவேண்டுமென்றுதான் விரும்புகிறேன். நானும் ஒரு விவசாயி. உணவை உண்பவர் கொடுக்கும் பணத்தில் மிகச் சிறிய பகுதியே உணவை உற்பத்தி செய்பவரிடம் போய் சேர்கிறது. நிலத்தை உழுது பயிர்செய்து உணவை உண்டாக்கியவருக்கு அதன் முழு விலையும் கிடைக்கவேண்டும். உண்பவர் கொடுக்கும் ஒவ்வொரு பைசாவும் உற்பத்தி செய்பவரிடம் போய்ச் சேரவேண்டும். இந்த மாதிரி நடைபெறும்படிச் செய்வது இடைக்கால சர்க்காரின் கடமையாகும். அப்படிச் செய்ய அவர்களால் முடியாவிட்டால், அவர்கள் ராஜிநாமா செய்து வெளியே போய்விட வேண்டும். உற்பத்தி செய்வோருக்கு நஷ்டம் உண்டாகும்படி, உண்பவருக்கு மலிவான விலையில் உணவுப்பொருள்களைக் கொடுக்கலாகாது. விவசாயிக்கு உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணம் விலை குறைந்துபோவதன்று. தரகர்கள் விழுங்கிவிடுவதேயாகும்.

கதர் உற்பத்தி விஷயத்தில் கூட நூல் நூற்பவர்கள் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் எட்டணா கூலி கிடைக்கவேண்டுமென்பதை லட்சியமாகக் கொண்டிருந்தேன். கதரின் விலை கூடினால் கதர் உற்பத்தி அழிந்துபோகுமென்று பலர் ஆக்ஷேபித்தபோதிலும் நாலணாக் கூலி கொடுக்கும் நிலைமைக்கு வந்து சேர்ந்தேன். இது தான் உற்பத்தி செய்கிறவர்கள் சம்பந்தமாக நான் கொண்டுள்ள கொள்கையாகும். தரகர் இருக்கவேகூடாது. தரகர் தான் விவசாயியை உறிஞ்சி விடுகிறார். அவர் இல்லாவிட்டால் விவசாயி பட்டினி கிடக்கவேண்டிய அவசியமிருக்காது. எந்த விவசாயியாவது அதிக லாபமடைய எண்ணி

கள்ளத்தனமாக விற்றால் அவர் விவசாயி என்று சொல்லத் தகுந்தவர் ஆகமாட்டார். அவரும் ஜமீன்தார்களைப் போல பிறரைக் கெடுத்து வாழ்பவரேயாவார்.

4. கேள்வி :—காங்கிரஸில் கக்ஷிகள் ஏற்படுவது காங்கிரஸ் அமைப்பை அதிகமாக பாதிக்கின்றது. அதற்குரிய பரிகாரம் யாது ?

பதில் :—காங்கிரஸில் காங்கிரஸ்காரர் என்ற ஒரு கக்ஷியை தவிர வேறு எந்த கக்ஷியும் இருக்க முடியாது. அப்படிச் சொல்வதைக் கொண்டு, காங்கிரஸுக்குள் வித்தியாசமான அபிப்பிராயங்களுக்கு இடங்கிடையாதென்று சொல்வதாக எண்ண வேண்டாம். ஒரே அபிப்பிராயமாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. செத்த பிணங்கள் தான் ஒரே அபிப்பிராய முடையதாக இருக்க முடியும். 'மனிதர்கள் எல்லோரும் சுதந்திரத்தோடும், சமத்துவத்தோடும் பிறக்கிறார்கள்' என்பது இயற்கை விதியன்று. உதாரணமாக எல்லா மனிதர்களும் அறிவு விஷயத்தில் சரி சமானமாக இருப்பதில்லை. ஆனால் அதிகமான அறிவுடையவர்கள் அதை தங்கள் சுயநலத்துக்காக உபயோகிக்காமல் குறைந்த அறிவுடையவர்களின் நலத்துக்காக உபயோகிப்பது தான் உண்மையான சமத்துவமாகும். இப்பொழுது காங்கிரஸுக்குள் பலதிறப்பட்டவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். அதனால் தான் காங்கிரஸ் அமைப்பிலிருந்து "சமாதானமானதும் நியாயமானதும்" என்னும் மொழிகளை நீக்கிவிட வேண்டுமென்று யோசனை கூறி இருக்கிறேன். அதைக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் உண்மையையும் அஹிம்சையையும் விட்டுவிட வேண்டுமென்று சொல்வதாக எண்ண வேண்டாம். என்னுடைய நோக்கம் வேஷம் போடுகிறவர்களை விலக்கிவிட வேண்டுமென்பது ஒன்றுதான். வேஷம் போடுவதைச் சகிக்க முடியவில்லை. பலாத்காரத்தில் நம்பிக்கையுடையவர்கள் அதை பகிரங்கமாக வெளியிடட்டும். மனத்தில் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்துக்கொண்டு வாயால் அஹிம்சை பேசுவது அயோக்கியத்தன மட்டு மன்று, கோழைத்தனமுமாகும். பிரிட்டிஷ் சர்க்காரிடத்தில் நாம் கையாண்ட அஹிம்ஸை பலவீனர்களுடைய அஹிம்ஸை தான். நம்மிடை காணப்படும் இத்தனை சச்சரவுகளுக்கும் காரணம் அதுதான். இங்கிலாந்தில் சிலர் பணக்காரர்களின் வீட்டுக்குள் போய் உட்கார்ந்து கொண்டு வெளியே வரமாட்டேனென்று சாதிக்கிறார்கள். நம்மிடையே காணப்படும் குழப்பங்களுக்கு அதை முன்மாதிரியாகக் காட்டுகிறார்கள். ஆனால் எதையும் குருட்டுத் தனமாக பின்பற்றுவது எவ்வித நன்மையும் உண்டாக்காது. பலவீனர்களுடைய அஹிம்ஸையைப் போல் நம்முடைய ஆண்மையைக் குறைக்கக்கூடிய சக்தி வேறெதுவும் கிடையாது. உண்மையான அஹிம்ஸை இருக்குமானால் பரிபூர்ணமான சகிப்புத்தன்மை காணப்படும். அப்பொழுது எத்தனை அபிப்பிராயங்கள் எழுந்தாலும், அவைகளுக்கெல்லாம் இடமுண்டு. அப்பொழுது அபிப்பிராய வித்தியாஸம் கக்ஷிச் சண்டையாகவும் சூழ்ச்சியாகவும் இல்லாமல் சரியானபடி அறிவு வேலை செய்வதாகவே இருக்கும். கக்ஷிச் சண்டையும் சூழ்க்சியும் இருப்பது சுதந்தரத்துக்கு முரண்பட்டதாகும்.

5. கேள்வி :—ஹிந்து முஸ்லிம் பிரச்னையைத் தீர்ப்பது எப்படி ?

பதில் :—அது விஷயத்தில் நான் தோல்வி அடைந்துவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய யோசனை காட்டில் கத்திய குரலாக இருக்கிறது. ஆனால் என்னுடைய யோசனை ஒன்றுதான் அனுபவசாத்தியமான யோஜனை. ஒரு சமூகத்தைச் சேர்ந்த சிலர் மனுஷத்தன்மை யற்ற காரியங்களைச் செய்ததற்காக அந்த சமூகத்தார் அனைவரையும் குறைகூறி ஒதுக்கிவைப்பது தவறு. முஸ்லீம் லீக் ஹிந்துக்களை ஏசலாம். இந்தியாவை பகைவருடைய நாடாகக்கருதலாம். காங்கிரஸோடு சேர்ந்திருக்கும் முஸ்லீம்களை துரோகிகளென்று கூறலாம். அவர்களை அழித்துவிட வேண்டுமென்று எண்ணலாம். இந்த மாதிரி யெல்லாம் அவர்கள் வெறிகொண்டு பேசியபோதிலும் நாம் முஸ்லீம்கள் எல்லோரையும் நம்மோடு அன்பால் பிணித்துக் கொள்ள வேண்டும். அந்த முயற்சியை நிறுத்திவிடக்கூடாது. ஹிந்துக்கள் மனத்தில் பழிவாங்கும் எண்ணமோ கோபமோ இல்லாமல் லக்ஷக்கணக்காக பிராணத்தியாகம் செய்ய தயாராயிருந்தால் முஸ்லீம்களை நண்பர்களாக்கிக் கொள்வது சாத்தியமாகும். இன்று அஹிம்சையை வெறும் கனவென்று எள்ளி நகையாடி ஒதுக்குவது சரிதான். ஆயினும் ஹிந்து மதத்தை சாகாமல் இருக்கச் செய்வதற்கும் இந்தியாவை பிளவாமல் இருக்கச் செய்வதற்கும் அஹிம்ஸை ஒன்றுதான் வழி என்று உறுதியாகக் கூறுகிறேன். சென்ற இருபத்தைந்து வருஷ காலமாக காங்கிரஸ் அஹிம்ஸையை அனுஷ்டித்த சரித்திலிருந்து இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்ளா விட்டால் வேது எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ள முடியாது.

6. கேள்வி :—காங்கிரஸை பகிரங்கமாக எதிர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சியார்கள் செய்யும் காரியங்களை தடுப்பது எப்படி ?

பதில் :—ஹிந்து முஸ்லிம் பிரச்னை சம்பந்தமாக நான் கூறியுள்ள கொள்கை கம்யூனிஸ்ட்டுகள் விஷயத்திலும் பொருந்தும். முஸ்லிம் என்று சொல்லும் பொழுது முஸ்லிம் லீகையே குறிப்பிடுகிறேன். முஸ்லிம்கள் எல்லோரும் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள் அல்லர். முஸ்லிம்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்காவிட்டால் பத்துக் கோடி இந்திய முஸ்லிம்கள் அழிந்து போவார்கள் என்று முஸ்லிம் லீகர்கள் சொல்லி வருகிறார்கள். அப்படிச் சொல்வது பயபீதி உண்டாக்குவதற்காக சொல்வதே யன்றி வேறன்று. எந்த ஜனங்களும் தங்களில் நாலில் ஒரு பகுதியாரை சாசுவதமாக நசுக்கவோ அழித்துவிடவோ முடியுமென்று கூறுவது சுத்த அபத்தமாகும். பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானதாயிருந்தாலும் இஸ்லாம் மதத்திற்கு நன்மை தருவதாயிருந்தாலும் நான் அதைக் கொடுப்பதற்கு கொஞ்சமும் தயங்கமாட்டேன். ஆனால் முஸ்லிம் லீக் கேட்கும் பாகிஸ்தான் இஸ்லாம் மதத்திற்கு முற்றிலும் விரோதமானது என்று உறுதியாக நம்புகின்றேன். அது பாபகரமான கோரிக்கை என்று நான் கூற தயங்கவில்லை. இஸ்லாம் மதமானது மனித குடும்பத்தை பிரிக்கும்படி கூறவில்லை, மனிதர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சகோதரர்களாக வாழ வேண்டுமென்றே வற்புறுத்துகிறது. இந்தியாவை இரண்டாகப் பிரிக்க எண்ணுகிறவர்கள் இந்தியா தேசத்துக்கும் இஸ்லாம் மதத்துக்கும் ஒருங்கே பகைவர்கள் ஆவார்கள். அவர்கள் என்னைத் துண்டு துண்டாக வெட்டி விடலாமே யன்றி எதைத் தவறென்று நினைக்கிறேனோ அதை ஒப்புக் கொள்ளும்படி செய்துவிட முடியாது.

கம்யூனிஸ்ட்டுகள் விஷயம் வேறு விதமானது, அவர்கள் கஷ்டங் கொடுப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. அவர்களிடையே எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் குமாரர் ஸ்தானத்தில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மை பொய், நல்ல வழி தீய வழி என்று வித்தியாசம் பாராட்டுவதில்லை

என்று தோன்றுகிறது. இந்தக் குற்றச்சாட்டு தவறென்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் செய்வதாகக் கூறப்படும் செயல்கள் அந்தக் குற்றச்சாட்டை ஆதரிப்பது போல் தோன்றுகின்றன. அத்துடன் அவர்கள் இந்தியாவைவிட ரஷ்யாவையே தங்கள் ஆத்ம நிலையம் போல் எண்ணுவது போலவும் தங்களுக்கு வழிகாட்ட ருஷ்யாவையே எதிர்பார்த்து நிற்பது போலவும் தோன்றுகிறது.

அயல்நாட்டை நம்பி நிற்பதை நான் ஒருநாளும் ஆதரிக்க மாட்டேன். இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கும் உணவுப்பஞ்ச நெருக்கடியில்கூட ருஷ்யாவிலிருந்து கோதுமை வருமென்று எதிர்பார்த்து நிற்கக்கூடாதென்றுகூட நான் கூறி இருக்கிறேன். அன்னியர் தயவை எதிர்பார்ப்பதைவிட நம்முடைய பூமியை எதிர்பார்த்து நிற்பதற்கான சக்தியையும் தைரியத்தையும் உடையவர்களாகவே இருக்க வேண்டும். அப்படிக்கில்லையானால் சுதந்திர தேசத்தாராக இருக்க அருகதையுடையவர்களாக மாட்டோம். இதுபோல அன்னிய நாட்டாருடைய தத்துவங்களையும் நம்பி நிற்கக் கூடாது. எவ்வளவு தூரம் அந்தத் தத்துவங்களை நம்முடைய நாட்டுக்குகந்தவாறு திருத்தி அமைத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு தூரந்தான் நான் அவைகளை ஏற்றுக்கொள்ளச் சம்மதிப்பேன். அப்படிக்கின்றி அவைகள் என்னை ஆட்கொள்வதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். ஆதலால் கம்யூனிஸ்ட்கள் விஷயமாக என்னுடைய கொள்கை யாதெனில், நான் அவர்கள் கையால் கொல்லப்பட தயாராயிருக்கிறேன் என்பதும் அவர்களுக்குப் பழிக்குப் பழியாக எவ்வித தீங்கும் செய்யமாட்டேன் என்பதும் ஆகும்."

புது டில்லி, — 30-9-46 — பியாரேலால்.

## ஒரு நல்ல வழி

டல்ஹவுஸியிலிருந்து ஒரு நிருபர் எழுதிய கடிதத்தின் சாரம் வருமாறு :—

சம்பா சமஸ்தானத்திலுள்ள ஒரு கிராமத்தில் சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி தங்களுக்கு எழுத விரும்புகின்றேன். எந்த மாஜிஸ்திரேட்டும் எந்தக் காலத்திலும் இதற்குமுன் இவ்விதமாக நடந்திருப்பாரென்று நான் எண்ணவில்லை ஒருநாள் சில அக்கிரமிகள் குடித்து வெறிகொண்டு கடைகளில் புகுந்து சாமான்களை வாரினார்கள். தடுக்க வந்தவர்களை அடித்தார்கள். கடைகளைக் கொளுத்தி விடுவதாக பயமுறுத்தினார்கள். கடைக்காரர்கள் பயந்துபோய் கடைகளை மூடி விட்டு சமஸ்தான அதிகாரிகளிடம் தங்களைப் பாதுகாக்கும்படியாக வேண்டிக் கொண்டார்கள். அதன்மேல் சமஸ்தான சர்க்கார் குற்றவாளிகளைக் கைதி செய்வதற்காக ஒரு மாஜிஸ்திரேட்டை அந்த கிராமத்திற்கு அனுப்பி வைத்தார்கள். குற்றம் செய்தவர்களைத்தான் பிடிக்க வேண்டும் என்றும், நிரபராதிகளைத் தொடக் கூடாதென்றும் அந்த மாஜிஸ்திரேட் போலீசாரிடம் சொன்னார். அக்கிரமிகள் கைதி செய்யப்படும் வரை கடைக்காரர்கள் தங்கள் கடைகளைத் திறக்க மறுத்தார்கள். மாஜிஸ்திரேட் அவர்களுடைய சொத்தைப் பரிபூரணமாகப் பாதுகாத்துத் தருவதாக உறுதி கூறிய பிற்பாடுங்கூட அவர்கள் கடைகளைத் திறக்காதிருந்துவிட்டார்கள். அதனால் கிராமத்து ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டம் உண்டாயிற்று. இப்படி எவ்வளவு சொல்லியும் திறக்காததைக் கண்டதும் மாஜிஸ்திரேட் சட்டப்படி போலீஸாரைக் கொண்டு பூட்டுக்களை உடைத்துத் திறப்பதற்குப் பதிலாக கிராமத்து ஜனங்களின் நன்மையை உத்தேசித்து உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார். இந்தச் செயல் மிகுந்த மந்திர சக்தி வாய்ந்ததாகயிருந்தது. மறுநாளே எல்லாக் கடைகளையும் திறந்து விட்டார்கள். அக்கிரமிகள் கைதி செய்யப் பட்டார்கள். அமைதி நிலவியது."

இது உண்மையாயிருக்குமானால், உண்ணாவிரதம், சர்க்கார் அதிகாரிகளுடைய ஆயுத சாலையில் எவ்வளவு பெரிய ஆயுதமாக இருக்கக் கூடுமென்பது இதிலிருந்து தெரிகிறது.

புது டில்லி. மோ. க. காந்தி.

## நல்ல முன் மாதிரி

குஜராத் ஹரிஜன சேவா சங்கத்தின் காரியதரிசி திரு. பரிக்ஷித்லால் மஜூம்தார் சென்ற ஜூன் மாதம் முதல் குஜராத் வித்யா பீடக் கட்டடத்தில் கல்லூரி மாணவர்களுக்காக ஒரு ஹாஸ்டல் நடத்தி வருகிறார். அதில் 16 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் 12 பேர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். 4 பேர் ஜாதி ஹிந்துக்கள். அவர்கள் எல்லோரும் சரிசமானமான முறையில் ஒன்றாகச் சாப்பிட்டுஒன்றாகவாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் ஆமதாபாத்தில் பல கலாசாலைகளில் படிக்கிறார்கள். சர்க்கார் ஹரிஜனமாணவர்களுக்கு மாதந்தோறும் 25 ரூபாய் கொடுக்கிறார்கள். மற்ற மாணவர்கள் தங்கள் சாப்பாட்டிற்குத் தாங்களே பணம் கொடுக்கிறார்கள். குஜராத் ஹரிஜன சேவா சங்கம் வீட்டு வாடகைக்கும் சுத்தம் செய்வதற்கும் பணம் கொடுக்கிறது. அதற்காக வருஷத்திற்கு 1000 ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறது. இப்படி ஹரிஜனங்களும், ஜாதி ஹிந்துக்களும் ஒன்றாகச் சாப்பிட்டு ஒன்றாக வாழ்வது தீண்டாமை விலக்குக்கு அனுகூலமான ஒரு நல்ல சாதனமாகும். இதைப் பார்த்து மற்ற மாகாண சங்கங்களும் இதுபோன்ற பல ஹாஸ்டல்களை நடத்துவார்கள் என்று நம்புகிறேன்.

எ. வி. தக்கார்.

## இங்கிலாந்தில் புதுக் கல்வி

ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் கல்வி இலாகாவின் தலைவர் ஜாக்ஸ் என்பவர் இங்கிலாந்தில் நடைபெறும் கல்வி முறையைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். நமக்கு ஏற்பட்டிருக்கிற கல்விப் பிரச்னைகளைப் போலவே அங்குள்ளவர்களுக்கும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவருடைய யோசனைகள் நமக்கும் பயன்படலாம் என்று கருதுகிறேன்.

இப்பொழுது நமது நாட்டில் நடைபெறும் கல்வியானது அறிவை மட்டும் வளர்ப்பதாக இருக்கிறதேயன்றி உடம்பையோ ஒழுக்கத்தையோ வளர்ப்பதாக இல்லை. இதைக் குறித்து ஜாக்ஸ் கூறுவதாவது :—

"அறிவை வளர்ப்பது கல்வி முறையில் சிறந்தது தான். ஆனால் நமக்கு உடம்பும் இருக்கிறதே. அதற்குக் கல்வி யளிக்கவேண்டுமென்று நாம் இன்னும் சிந்திக்கவில்லை. ஆனால் நாம் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் உடம்பு, அறிவு, ஒழுக்கம், ஆன்மா ஆகிய சகல சக்திகளையும் வளர்க்க வேண்டுவது அவசியமாகும்."

### இதே விஷயத்தை

ஹப்போல்டு என்பவர் பிரஜைகள் சிருஷ்டி என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

"நாம் மூளையினால் மட்டும் யோஜிக்காமல் நம் உடம்பு முழுவதையும் கொண்டு யோசிக்கும்படியாக பயிற்சியளிக்க முடியும் என்பது இப்பொழுது கல்வி சம்பந்தமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பெரிய உண்மைகளில் ஒன்றாகும். உடற் பயிற்சியைப் பற்றி அக்கறை கொண்டுள்ள ஆசிரியர்கள் தான் இதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். உடம்பை அபிவிருத்தி செய்தால் அறிவு அபிவிருத்தி அதிகமாகிற தென்றும் உடம்பைக் கட்டுப்படுத்தக் கற்

றுக் கொண்டால் ஆசைகளைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ளலாமென்றும் புதிய முறையில் ஞானம் பெற முடிகிறதென்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இப்படி இங்கிலாந்திலுள்ள ஆசிரியர்கள் கூறுவது போலவே இதர தேசங்களிலுள்ள ஆசிரியர்களும் கூறுகிறார்கள். செக்கோஸ்லோவேக்கியா தேசத்தில் உடற்பயிற்சியைக் கொண்டே அந்த தேசத்து மக்களை உடல், அறிவு, ஆன்மா மூன்றிலும் அபிவிருத்தி அடையும்படி செய்து விட்டார்களாம். குழந்தையின் சகல சக்திகளையும் அபிவிருத்தி செய்யும் விஷயத்தைக்குறித்து ஆசிரியர் ஜாக்ஸ் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

'ஒரு பையன் தச்சுவேலை செய்ய ஆசைப்படுவதாக வைத்துக் கொள்வோம், அவன் தான்செய்ய விரும்பும் காரியத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்கிறான். அதற்கான வழிகளைப் பற்றிச் சிந்திக்கிறான். துல்லியமாக அளக்கிறான். கண்ணாலும் கையாலும் சாமர்த்தியமாகக் காரியங்களைச் செய்கிறான். தன் சக்தியை விரயமாக்காமல் சிக்கனமாக உபயோகிக்கிறான். எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். இந்தமாதிரி அவன் நடந்துகொள்வதால் அவனுடைய உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்று சக்திகளும் ஒருங்கே வேலை செய்கின்றன. அவன் செய்து முடிக்கும் வேலை இந்த மூன்று சக்திகளுடைய சிருஷ்டியாகும்."

ஜாக்ஸ் குழந்தைகளின் உடல் வளர்ச்சியைப் பற்றிக் கீழ்கண்டவாறு கூறுகிறார் :—

"பள்ளிக்கூடமென்பது முதன் முதலாகக் குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தை அமைத்துக் கொடுக்கும் ஸ்தாபனமாக இருக்க வேண்டும். அங்கே உடம்பு, அறிவு, ஆன்மா மூன்றும் ஏக காலத்தில் ஆரோக்கியம் பெறும்படிச் செய்ய வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உடற் பயிற்சி இலாகா ஒன்று கட்டாயமாகஇருக்க வேண்டும். அறிவு விஷயத்திலே ஸ்கூல் பைனல் ஸர்டிபிகேட் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பது போல உடம்பு விஷயத்திலும் பரீக்ஷை செய்து சர்ட்டிபிகேட் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் தனித்தனியாக இராமல் ஒன்று சேர்ந்தே இருக்க வேண்டும். நம்முடைய பள்ளிக்கூடங்கள் அறிவு விஷயத்தில் கவனம் செலுத்துவது போல உடம்பு விஷயத்திலும் கவனம் செலுத்தும் பொழுதுதான் நம்முடைய மாணவர்களிடம் காணப்படும் உடம்பு சம்பந்தமான அறிவின்மை ஒழியும்."

மற்றப் பாடங்களை கற்பிப்பதோடு கைத்தொழில்களையும் கற்பிக்க வேண்டுமென்றும் கூறுகிறார். சிறுமிகளுக்கு உடை அழகு சிற்பம் முதலிய விஷயங்களும் கற்பிக்கப்பட வேண்டும். சிறுவர்களுக்கு மரவேலை உலோக வேலை புஸ்தகவேலை படமெழுதுதல் போன்ற விஷயங்களும் கற்பிக்கப்பட வேண்டும்.

இவைகளெல்லாம் இங்கிலாந்துக் கேற்றவைகளாக இருக்கலாம். ஆனால் நம்முடைய நாட்டில் உணவு விஷயத்திலும் உடை விஷயத்திலுமே நம்முடைய கவன முழுவதும் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆதலால் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் கொஞ்சம் பூமியைக் கொடுத்து அதில் புஷ்பங்கள் காய்கறிகள் பயிராக்கும்படி செயய வேண்டும். இது எல்லா இடத்திலும் சாத்தியமா யிராது. ஆனால் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நூல் நூற்பதை எளிதாக ஏற்படுத்திவிடலாம். அதில் எவ்வித கஷ்டமும் கிடையாது.

ஜாக்ஸ் கையினால் செய்யும் தொழில்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார் :—

"மனிதன் என்பவன் எந்த விஷயத்திலும் திறமை பெற வேணடும் என்று ஆசைப்படுகிற மிருகமாவான். ஆனால் இந்த ஆசையை யாரும் கவனிப்பதில்லை. கையால் செய்யக்கூடிய திறமையை பள்ளிக்கூடங்களில் கவனிப்பதேயில்லை. ஆசிரியர்களுக்குத் தக்க பயிற்சி அளித்தால்தான் இந்த விஷயம் பள்ளிக்கூடங்களில் முன்னேற்ற மடையும்."

இப்படி ஆசிரியர்கள் பயற்சிபெற வேண்டியது இந்தியாவிலும் அத்தியாவசியமான ஒரு காரியமாகும்.

வி. ஜி. தேசாய்.

## இராணுவம் எதற்கு?

காந்தியடிகள் பம்பாயில் நடந்த அக்கிரமங்களைக் குறித்து வருந்திய பொழுது கூறியதாவது :—

"யார் யாரைக் கொன்றார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஹிந்துக்கள் தங்களைக் கொல்ல வந்தவர்களைக் கொன்றுவிடக் கூடிய சக்தி பெற்றுவிட்டதாகச் சந்தோஷப்படுவதைக் காண எனக்கு வருத்தமாயிருக்கிறது. ஹிந்துக்கள் பழிக்குப் பழி வாங்காமலிருந்திருந்தால் எனக்குச் சந்தோஷமாயிருந்திருக்கும்.

அததான் பகைமைத் தீயை அணைப்பதற்குரிய வழியாகும். ஆனால் இன்று அவர்களுடைய மனத்தில் அதற்கு வேண்டிய வீரமும் அன்பும் அஹிம்சையும் இல்லை. ராணுவ உதவியும் போலீஸ் உதவியும் கேட்கிறார்கள். சண்டையிட்டுக் கொள்வதே தவறு. அதைவிடப் பெரிய தவறு பிரிட்டிஷாரிடம் பயிற்சி பெற்று பிரிட்டிஷாருக்கு ராஜ விசுவாசப் பிரமாண மெடுத்துள்ள ராணுவத்தின் உதவியை நாடுவதாகும். ஜனங்கள் தங்கள் சக்தியையே பெருக்கிக் கொள்ள வேண்டும். ராணுவ உதவி கேட்டால் பரிபூர்ண சுதந்திரத்தின் கழுத்தை நெரிப்பது போலாகும். அதனால் ராணுவ உதவி கேட்டால் மந்திரிகள் ராஜிநாமாச்செய்துவிடவேண்டும். ஜனங்கள் தாங்களாவே தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ராணுவத்தை நிர்மாண வேலைக்கு உபயோகப்படுத்த வேண்டும். அதில் அவர்கள் நிபுணர்கள்."

## ஒரு சமய சஞ்சீவி

கேள்வி:— இயற்கைச் சிகிச்சையைச் சகல வித நோய்களுக்கும் உபயோப் படுத்தலாமென்று சொல்லப் படுகிறது. அப்படியானல் அதைக் கொண்டு தூரத்துப் பார்வை, கிட்டத்துப் பார்வை, கண்ணில் பூவிழுதல் முதலிய கண் நோய்களை எல்லாம் குணப்படுத்த முடியுமா? மூக்குக் கண்ணாடி இல்லாமலிருக்க முடியுமா? தொண்டையிலுண்டாகும் கட்டி முதலியவைகளை ஆப்பரேஷன் செய்யாமல் குணப் படுத்த முடியுமா?

பதில்:— இயற்கை சிகிச்சையைக் கொண்டு எல்லா நோய்களையும் குணப்படுத்தலாம் என்று சொல்லுகிறவர்கள் உண்டு. நான் அவர்களில் ஒருவன் அல்லன். ஆயினும் ஒன்று மட்டும் தைரியமாகச் சொல்லலாம். இயற்கை விதிகளைச் தெரிந்தோ தெரியாமலோ மீறுவதன் மூலமாகத்தான் நோய் உண்டாகிறது. ஆதலால் இயற்கை விதிகளை அனுஷ்டிக்கக் காலாகாலத்தில் ஆரம்பித்து விட்டால் உடம்பு பழைய ஆரோக்ய நிலைமையை அடைந்துவிடும். இயற்கைக்கு விரோதமாக அளவுக்கு மிஞ்சி நடந்து விட்டால் இயற்கை கொடுக்கும் தண்டனையை அனுபவித்துத் தீரவேண்டியது தான். அனுபவிக்கப் பிரியப் படாவிட்டால் வைத்தியருடைய உதவியை நாடவேண்டியது தான். தண்டனைக்குத் தகுதியுடையவராகத் தம்மை ஆக்கிக் கொண்டவர்கள் அதை ஏற்றுக் கொள்ளுவதன் மூலம் மனோ பலம் அடைவார்கள். அதை ஏற்றுக் கொள்ளாமல் தப்புவதன் மூலம் மனோ பலத்தை இழப்பார்கள்.

மோ. க. காந்தி

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை